அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 05/2012(i)

எனது இல: CS/ICTS/01/Abs.Exam
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,
2013.06. 18

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள் அனைவருக்கும்.

**இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆம் தரத்திற்குள் உள்ளீர்ப்பதற்கான தொழில்சார் தகைமைகளைத் திருப்திப்படுத்துகின்ற தேவைப்பாட்டில் இருந்து விலக்களிப்பதற்கான தகுதிபெறும் பரீட்சை.**

1631/20 ஆம் இலக்க 2009, டிசம்பர், 09 ஆம் திகதிய இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2009, டிசம்பர், 08 ஆம் திகதிய இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் 2011.02.15 ஆம் திகதிய 04/2011 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையினால் மேற்கொள்ளப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம், குறிப்பிடப்பட்ட சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆம் தரத்திற்குள் உள்ளீர்ப்பதற்கான தொழில்சார் தகைமைகளைத் திருப்திப்படுத்துகின்ற தேவைப்பாட்டில் இருந்து விலக்களிப்பதற்கான தகுதிபெறும் பரீட்சையொன்றினை நடாத்துவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் இது குறித்து அமைச்சரவையின் அங்கீகாரமும் பெறப்பட்டது.

02. அதன்பிரகாரம், 2012 யூலை மாதம் 20 ஆம் திகதி நடைபெற்ற தகைமைப் பரீட்சிப்புக்கு ஏதேனும் ஒரு காரணத்தினால் தோற்றுவதற்கு இயலாமற்போன மற்றும் சித்தயடைய தவறிய பரீட்சார்த்திகளுக்காக நடாத்தப்படும் பரீட்சை (எழுத்துப் பரீட்சை) 2013 யூலை மாதம் 13 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு கொழும்பில் நடாத்தப்படும். இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் இந்தப் பரீட்சையினைப் பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ உரிமையைக் கொண்டுள்ளார்.

03. தகைமைகள்: தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் தொடர்பான பதவிகளுக்கு முறையாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களில் 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் MN-1-2006-A, MN-2-2006A மற்றும் MT-1-2006A வேதன அளவுத்திட்டத்திற்கு உரித்துடைய பதவிகளை வகிக்கின்ற பின்வரும் உத்தியோகத்தர்கள் இந்தத் தகுதிபெறும் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

i. இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டிருப்பதற்குத் தங்களுடைய விருப்பினைப் பிரயோகித்த ஆனால் குறிப்பிடப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் 8.1.1. (ஊ) மற்றும் 4/2011 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 5.1 (ii) இன் பிரகாரம் தொழில்சார் தகைமைகளைத் திருப்திப்படுத்தாததன் காரணமாக உள்ளீர்க்கப்பட்டிராத உத்தியோகத்தர்கள்.

04. உத்தியோகத்தர்களின் தொழில்சார் தகைமையினைத் திருப்திப்படுத்துவதற்காக மட்டும் இந்தப் பரீட்சை இருப்பதனால், மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பின் 8.1.1. மற்றும் 4/2011 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 5.1 (ii) இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டிருப்பதற்கு வேண்டப்படும் கல்வித் தகைமை மேற்படி சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சலுகைக் காலப்பகுதிக்குள் திருப்திப்படுத்தப்படுதல் வேண்டும்.

05. இந்தப் பரீட்சையானது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் நடாத்தப்படுவதுடன் சகல பரீட்சார்த்திகளும் அவரால் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க ஒழுகி நடத்தல் வேண்டும். ஏதாவது கட்டளைகள் மற்றும் ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து பரீட்சார்த்திகள் ஒழுங்காற்று அதிகாரியால் சுமத்தப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

06. விண்ணப்பங்கள் இந்தச் சுற்றறிக்கையின் பிற்சேர்க்கையின் மாதிரிப்படிவத்தில் உள்ளவாறு இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் மாதிரிப்படிவங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் முறையாகப்பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2013, யூலை 01 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் **“இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,**

**அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07."** என்ற முகவரியினை அடையும் வண்ணம் உரிய அமைச்சுச் செயலாளர்/ திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படுதல் வேண்டும். "இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவைக்குள் உள்ளீர்ப்பதற்கான தொழில்சார் தகைமைகளை திருப்திப்படுத்துவதற்கான தகைமைப் பரீட்சை" என்று விண்ணப்பத்தினை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மூலையில் எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்பு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் காணாமல் போன அல்லது காலம் தாழ்த்திய, இந்த அறிவித்தலில் கொடுக்கப்பட்ட முகவரியை விட ஏனைய ஆட்களினால் பணிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பற்றிய விசாரணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

07. விண்ணப்பம் – இலக்கம் 1.0 தொடக்கம் 3.0 வரை முதலாவது பக்கத்திலும் ஏனையவை அடுத்த பக்கத்திலும் அடங்கும் வண்ணம் A4 அளவிலான தாலொன்றின் இருபக்கங்களையும் உபயோகித்துத் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் கணினிகளால் தயாரிக்கப்பட முடியுமாயினும் அது பரீட்சார்த்தியின் சொந்தக்கையெழுத்தில் நிரப்பப்படுதல் வேண்டும். மேலும், விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி அனுப்பப்படுதல் ஆகாது என்று அறிவிக்கப்படுகின்றது.

7.1 மாதிரி விண்ணப்பத்திற்கு அமையாத மற்றும் முழுமைபெறாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

7.2 இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் அவர்கள் சேவைக்குள் நுழைந்த மொழிமூலத்தில் அல்லது வேறு ஏதாவது அரசகரும மொழியில் அல்லது ஆங்கில மொழிமூலத்தில் இப் பரீட்சைக்குத் தோற்றமுடியும். பரீட்சார்த்திகள் அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட மொழிமூலத்தினை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7.3 சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்களில் பரீட்சையின் பெயர் ஆங்கிலத்தில் குறிப்பிடப்படுவதற்கு வேண்டப்படுகின்றது. மேலும், விண்ணப்பதாரி மாதிரிப்படிவத்திற்கு இணங்க விண்ணப்பம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனை சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சார்த்திகள்

விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

7.4 உத்தியோகத்தரால் கையளிக்கப்பட்ட முறையாகப் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட தினத்தில் உரிய உத்தியோகபூர்வ முத்திரையை இட்டு திணைக்களத் தலைவரின் சான்றிதழை நிரப்பி சான்றுப்படுத்தி, சான்றுப்படுத்திய திகதியை இட்டு விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்பு குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்புதல் அமைச்சுச் செயலாளர்/ திணைக்களத் தலைவரின் பொறுப்பாக உள்ளது.

08. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் அவர்கள் எழுத்துப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு பரீட்சார்த்திகளுக்கும் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதிப் பத்திரமொன்று வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லாத் தகுதிகளும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாகக் கொள்ளவியலாது. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளருக்கு தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினைச் சமர்ப்பிக்க வேண்டும். தமது அனுமதிப் பத்திரத்தைக் காட்டத் தவறும் எந்தவொரு பரீட்சார்த்தியொருவரும் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சார்த்திகள் தமக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

09. பரீட்சைத் திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்பு அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின், தங்கள் வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதியை பணிப்பாளர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு அனுப்புவதால் அனுமதி அட்டையினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விண்ணப்பதாரிகள் கொழும்பிற்கு வெளிப்பிரதேசமெனில் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றைத் தயாரித்து கோரிக்கைக் கடித பிரதியை உங்கள் வசம் வைத்துக்கொண்டு மேற்படி ஆவணங்களுடன் அனுப்புதல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களை வழங்குவதற்கு இயலாமல் போன பரீட்சார்த்திகளால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

10. உரிய நிறுவனத் தலைவர்கள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையினை வைத்திருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கான கடமை லீவினை இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்கு அவர்களை இயலச் செய்யும் பொருட்டு அங்கீகரித்தல் வேண்டும். இது குறித்து பிரயாணச் செலவுகள் வழங்கப்பட மாட்டாது.

11. பரீட்சார்த்திகளின் அடையாளம் : பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பொழுது, பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். இதன்பொருட்டு பின்வருவனவற்றில் ஏதேனுமொன்று பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை.

(2) செல்லுபடியான கடவுச் சீட்டு.

மேற்படி ஆவணங்களிலொன்றை முன்வைக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தத் தன்மை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் அவர்களின் பணிப்பின் மீது இரத்துச்செய்யப்படும்.

12. பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை:

i. ஒரு பரீட்சார்த்தியொருவர் இந்தப் பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளின் பிரகாரம், தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சார்த்தத் தன்மை இப்பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது அதற்குப் பின்னரோ எக்கட்டத்திலும் நிராகரிக்கப்படலாம்.

ii. பரீட்சார்த்தியொருவர் ஏதாவது காரணத்துக்காகப் பிழையான தகவல்களை வழங்கியிருந்தால் அல்லது அவர் உண்மை எதனையும் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

13. பரீட்சையின் நடவடிக்கைமுறை: வினாப்பத்திரமும் பாடத்திட்டமும் பின்வருமாறு.

| பாடம் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|

கணினித் தொழில் நுட்ப அடிப்படை அறிவு 100 1½ மணித்தியாலங்கள்

இந்த வினாப்பத்திரம் பல்தேர்வு மற்றும் இலக்கு வினாக்களை உள்ளடக்கியிருப்பதுடன்
கீழே கொடுக்கப்பட்ட உள்ளடக்கங்களின் கீழ் கணினி பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும்.

i. கணினிப் பிரயோகிப்புடன் கூடிய செந்தர பணிசெய் முறையின் கீழ் கோர்வை முகாமைத்துவம் (File management under the standard Operating System with the use of the computer)

ii. கணினி சொல்முறை வழிப்படுத்தல் (Computer Word Processing).

iii. விரிதாளை தயாரித்தலும் பிரயோகித்தலும் (Preparation and the use of spreadsheet).

iv. கணினிப் பிரயோகத்தால் தயாரித்தல் (Preparation by the use of computers).

v. தரவுத் தள உருவாக்கமும் பிரயோகமும் (Data – base creation and application).

vi. வலைப்பின்னல் மற்றும் மின்னஞ்சலினைப் பிரயோகிக்கும் ஆற்றல் (Ability to use the internet and the Electronic Mail).

**குறிப்பு:** பரீட்சார்த்தியொருவர் இந்தப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆகக்குறைந்தது 40 புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

14. இந்தச் சுற்றறிக்கையில் ஏற்பாடு செய்யப்படாத விடங்கள் குறித்து அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதியாக இருக்கும்.

கையொப்பம் / பீ. வீ. அபேகோன்

செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

(அலுவலக உபயோகத்தின் பொருட்டு)

**<u>இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவையின் 3 ஆம் வகுப்பின் III ஆம் தரத்திற்குள் உள்ளீர்ப்பதற்கான தொழில்சார் தகைமைகளை திருப்திப்படுத்துகின்ற தேவைப்பாட்டில் இருந்து விலக்களிப்பதற்கான தகுதிபெறும் பரீட்சை -2013</u>**

தாங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்.

சிங்களம் - 2, தமிழ்- 3, ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)
(பரீட்சார்த்தியின் தெரிவு மாற்றப்பட மாட்டாது)

---

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்: ......................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) உதாரணம்: SILVA, A.B.

1.2 முழுப் பெயர்: ..............................................................

(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

1.3 முழுப் பெயர்: .........................................................
(சிங்களத்தில்/ தமிழில்)

02. 2.1 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:
.........................................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

2.2 அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும்:
.........................................................................................................
(சிங்களத்தில்/ தமிழில்)

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி:
.............................................................................................................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)

03. 3.1 பால்:-

பெண் – 1
ஆண் – 0
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் இடுக)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு: - ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி:- ☐☐

3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம்:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4.0 4.1 இந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவையின் 3 ஆம் வகுப்பு தொடர்பான பதவியொன்றிற்கு முதல் நியமனத் திகதி: ...............................................

4.2 மேலே கொடுக்கப்பட்ட திகதியில் குறிப்பிட்டப்பட்டவாறு வகித்த பதவி: ....................................................

5.0 5.1 தற்போதைய பதவி: .........................................................................................

5.2 தற்போதைய சேவை நிலையம் மற்றும் முகவரி: ........................................................

**பரீட்சார்த்தியின் பிரகடனம்**

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையாகவும் சரியாகவும் உள்ளன என்றும் மேலே குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் பரீட்சையில் தோற்றுவதற்கு நான் உரித்துடையவன் என்றும் நான் இத்தால் உறுதியளிக்கின்றேன். மேலும், இந்தப் பரீட்சையினை நடத்துவது குறித்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் அவர்களால் சுமத்தப்படும் விதிகளால் நான் கட்டுப்படுத்தப்படுவதற்கும் இணங்குகின்றேன்.

.......................................

பரீட்சார்த்தியின் கையொப்பம்

திகதி:.........................

**அமைச்சுச் செயலாளர்/ திணைக்களத் தலைவர் சான்றிதழ்**

திரு/திருமதி/செல்வி: ........................................................................... என்பவரால் வழங்கப்பட்ட தகவல்கள் அவரது சேவைப்பதிவேட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டு அவை சரியான உள்ளன என்றும் இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப சேவையின் 3 ஆம் வகுப்பில் உள்ள பதவியொன்றில் அவர் சேவையாற்றுகின்றார் என்றும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதிபெற்றுள்ளார் என்றும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

.....................................................

அமைச்சுச் செயலாளர்/ திணைக்களத் தலைவரின் கையொப்பம்

திகதி: ................................

உறுதிப்படுத்தியவரின் முழுப்பெயர்: .....................................................................................

பதவிப் பெயர்: ..........................................................................................................................

(பதவிப் பெயர் முத்திரை இடப்படுவதனால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்).